
# சுவாமி விவேகானந்தர்
# ஒரு பன்முகப்பார்வை




EMPOWER THE YOUTH TO ENRICH THE NATION

சுவாமி விவேகானந்தர் மாணவர் சிந்தனை மன்றம்

என்.ஜி.எம். கல்லூரி

பொள்ளாச்சி

61 years of ACADEMIC EXCELLENCE

Celebrating
Six Decades of Service
to the cause of Education

# சுவாமி விவேகானந்தர்
# ஒரு பன்முகப்பார்வை

தொகுப்பாசிரியர்கள்

பேரா. க. ஸ்ரீனிவாசன்

முனைவர் க. தனலட்சுமி

என்.ஜி.எம் கல்லூரி

பொள்ளாச்சி

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,

அம்பத்தூர், சென்னை- 600 098.

☎: 044 - 26251968, 26258410, 48601884

Language: Tamil

Swami Vivekananthar Oru Panmugapparvai

Compilders : Prof. K. Srinivasan

Dr. K. Dhanalakshmi

N.G.M. College, Pollatchi.

First Edition: September, 2018

Copyright: Publisher

No.of Pages: 108

Publisher:

**New Century Book House Pvt. Ltd.,**

41-B, SIDCO Industrial Estate,

Ambattur, Chennai - 600 098.

Tamilnadu State, India.

email: info@ncbh.in

Online: www.ncbhpublisher.in

ISBN. 978 - 81 - 2343 - 807 - 8

Code No. A 4002

**₹ 70.00**

**Branches**

**Ambattur (H.O.)** 044 - 26359906, **Spenzer Plaza (Chennai)** 044-28490027 **Trichy** 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Tanjore** 04362-231371 **Tirunelveli** 0462- 2323990, 4210990, **Madurai** 0452 2344106, 4374106 **Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667 **Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 0434-3234387 **Ooty** 0423 2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800 **Pondicherry** 0413-2280101 **Thiruvannamalai** 04175-223449

**சுவாமி விவேகானந்தர் ஒரு பன்முகப்பார்வை**

தொகுப்பாசிரியர்கள்:

பேரா. க. ஸ்ரீனிவாசன்

முனைவர் க. தனலட்சுமி

என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி

முதல் பதிப்பு: செப்டம்பர், 2018

*அச்சிட்டோர்:* **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,**

16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14

☎: 044-28482441

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.

## பொருளடக்கம்

1. புரட்சிக்குப் பொருள் சொன்ன புனிதப் பெருமான்
-முனைவர் அமுதன் 15

2. விவேகமிக்க விவேகானந்தர்
-பேராசிரியர் மீ. ஜெயப்பிரகாஷ் 24

3. சுவாமி விவேகானந்தரின் ஆன்மீகப் புரட்சியும் புதுமையும்
-முனைவர் ஆர். கிருஷ்ணமூர்த்தி 33

4. சுவாமி விவேகானந்தர் இளைஞர்களுக்குத் தரும் தன்னம்பிக்கைச் சிந்தனைகள்
-பேரா. பி. நாகராஜன் 43

5. மறுமலர்ச்சிக்கு சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள்
-திரு. எஸ்.வி. இளங்கோ 50

6. தமிழகம் கொண்டாடும் சுவாமி விவேகானந்தர்
-முனைவர் ப. வடிவேல் 58

7. சுவாமி விவேகானந்தரின் மத நல்லிணக்கச் சிந்தனைகள்
-முனைவர் ச. முத்துவேல் 66

8. பலமே வாழ்வு
-பேரா. கே. ஸ்ரீனிவாசன் 72

9. இளைஞர்களும் பாரத தேசமும்
-முனைவர் ரெ. முத்துக்குமரன் 75

10. சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள்
-முனைவர் பே. மகேஸ்வரி 80

11. இளைஞர்களுக்கு சுவாமி விவேகானந்தர் முன்வைக்கும் இந்தியப் பண்பாடு
-முனைவர் சொ. சேதுபதி 85

12. இன்றைய சவால்களுக்கு சுவாமி விவேகானந்தர் கூறும் தீர்வுகள்
-முனைவர் க. தனலட்சுமி 95

13. சுவாமி விவேகானந்தரின் பார்வையில் பெண்கள்
-முனைவர் ஆ. மகாலட்சுமி 101

# 13. சுவாமி விவேகானந்தரின் பார்வையில் பெண்கள்

-முனைவர் ஆ. மகாலட்சுமி
தமிழ் உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
என்.ஜி.எம். கல்லூரி,
பொள்ளாச்சி.

தொன்று தொட்டு நம் பாரத நாடு பல்வேறு ஞானிகளையும், மகான்களையும், வீர, வீராங்கனைகளையும், கலைஞர்களையும் உலகிற்கு நன்கொடையாகக் கொடுத்து வருகின்றது. எப்பொழுதெல்லாம் தர்மம் மங்கி, அதர்மம் ஓங்குகிறதோ, அப்பொழுதெல்லாம் மீண்டும் தர்மத்தை நிலைநாட்டவும், இத்தேசத்தின் இலட்சியப் பாதையை அதன் வழியில் நிலைநிறுத்தவும் அவதாரப் புருஷர்கள் இம்மண்ணில் தோன்றுவதுண்டு. அவ்வகையில் ஆண்டாண்டு காலமாக வேதத்தில் புதைத்து கிடந்த கருத்துக்களைக் காலத்தின் தேவைக்கேற்ப, புதிய பரிமாணத்தில், புதிய சிந்தனைகளுடன், புதிய மாற்றத்திற்கு வித்திட்டவரே வீரத்துறவி சுவாமி விவேகானந்தர். இத்தேசத்திற்குப் புதிய உந்து சக்தியை அளித்து, பெண்களின் முன்னேற்றத்துக்குப் பாடுபட்ட விவேகானந்தரின் பார்வையில் பெண்கள் என்ற கருத்துக்களை ஆராய்வோம்.

## பெண் தெய்வம்

பாரத நாட்டிலேயே மிக உயர்ந்தது, இனியது, மென்மையானது, அன்பைத் தட்டி எழுப்புவது, அமைதியைத் தருவது, புனிதமானது பெண்மையே ஆகும். பெண்ணைத் தெய்வமாகப் போற்றுவதற்கு நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம். தாய்நாடு என்றும் 'தாய் மொழி' என்றும் பேசுகின்றோம். பெண்ணை முழுமுதற்கடவுளாக ஏற்றுக் கொண்டதால் பாரதத்தில் பெண்மைக்கு மரியாதை அளிக்கப்பட்டது.

பெண்மை குணங்களாகிய பணிவு, அடக்கம், நாணம், பொறுமை, தியாகம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இவற்றினுடைய ஆன்மீக முக்கியத்துவத்தையும், சமுதாய முக்கியத்துவத்தையும் மக்கள் உணர்ந்தார்கள். இந்த குணங்கள் சமுதாயத்தில் பெரிதளவில் பரவின.

தியாகத்தையும், பணிவையும் துணையாகக் கொண்டுதான் மனிதன் மிருகம் என்ற நிலையிலிருந்து நல்ல மனிதன் என்ற நிலைக்கும், அதற்கு மேல் தெய்வம் என்ற நிலைக்கும் உயர முடியும். அதற்கு உறுதுணையாகப் பணிவு, தியாகம், அடக்கம் என்ற குணங்கள் நிற்கின்றன. பெருமளவு மக்கள் இக்குணங்களை ஆன்மீக வாழ்வின் இன்றியமையாத பகுதிகளாக ஏற்றுக்கொண்டு இருப்பதால் இந்து மதத்தையே பெண்மை மதம் என்று மேலைநாட்டு அறிஞர் ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார். இப்படிச் சமுதாயத்தில் மாபெரும் மாறுதல்கள் வருவதற்கு பாரதப் பண்பாட்டில் பெண்ணைத் தெய்வமாக ஏற்றுக் கொண்டதே காரணமாகும்.

உலகத்து மதங்களுக்குள்ளே பெண்ணை முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொள்கின்ற ஒரே மதம் இந்துமதம் தான். சக்தி வழிபாடு வேத காலத்திலிருந்து பாரத நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். தமிழ் இலக்கியத்திலும் பெண் தெய்வ வழிபாடு பன்னெடுங் காலமாக ஏற்கப்பட்டு உள்ளது. இதன் அடிப்படையில் பராசக்தியை நற்குணங்கள் அனைத்துக்கும் உறைவிடமாக பாரதப் பண்பாடு போற்றுகின்றது.

## இந்தியத் தாய்

இந்தியாவில் குடும்பத்தின் ஆதாரம் தாய். தாய் என்பவள் கடவுளின் அவதாரம். கடவுள் ஒருவரே என்பதைக் கண்டு, அதை வேதங்களின் ஆரம்பக் கவிதைகளின் ஒரு கோட்பாடாக அமைந்தது ஒரு பெண் ரிஷியே ஆவாள்.

எங்கள் குடும்பத்தில் தாய் என்பவள் தெய்வமே. இந்த உலகில் தன்னலம் கலவாத அன்பு தாயிடம் மட்டுமே உள்ளது. அது எப்போதும் துன்பங்களை ஏற்றுக்கொள்வது, மற்றவர்களை நேசிப்பது. ஒரு இந்துவைப் பொறுத்தவரையில் தாய் என்பவள் தெய்வத்தின் அவதாரம்.

## தாயும் நரேந்திரனும்

இளமைப் பருவத்தில் நரேந்திரனாக இருக்கும் போதே, துறவறம் மேற்கொள்ள வேண்டும் என்ற ஆசை சுவாமி விவேகானந்தரிடம் இருந்தது. தனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், தனது தாயாரிடம் தனது துறவு விருப்பத்தைத் தெரிவிப்பார்.

ஒருமுறை தன் தாயாரிடம் துறவறம் மேற்கொள்ள விவேகானந்தர் அனுமதி கேட்டபோது, சமையலறைக்குப் போய் அங்கிருந்து கத்தியை எடுத்து வா என்றார் அவரது அன்னை. விவேகானந்தரும் கத்தியைக் கொண்டு வந்து கொடுத்தார். உடனே, கொஞ்ச நாட்கள் கழியட்டும். பின்பு துறவறம் மேற்கொள்ளலாம் என்று விவேகானந்தரின் அன்னை. தெரிவித்தார். தன்னுடைய துறவு விருப்பத்தை விவேகானந்தர் தன் தாயிடம்

தெரிவித்தபோதெல்லாம், இதையே தான் அவருடைய தாயார் சொல்லி வந்தார். துறவுக்கும் கத்திக்கும் என்ன தொடர்பு என்று புரியவில்லை.

ஒருமுறை இவ்வாறு விவேகானந்தர் கத்தியைக் கொண்டு வந்து கொடுத்ததும், இனி துறவு மேற்கொள்ளலாம் என்று அன்னை கூறினார்.

உடனே விவேகானந்தர், கத்திக்கும் துறவுக்கும் உள்ள தொடர்பு என்ன? என்று தன் அன்னையிடம் கேட்டார்.

விவேகானந்தரின் அன்னை முன்பு ஒவ்வொரு முறை நான் கத்தியைக் கொண்டு வா என்று சொன்ன போதும், பாதுகாப்பான கைப்பிடியைப் பிடித்துக் கொண்டு, ஆபத்தான கூர்மைப் பகுதியை என் பக்கம் நீட்டுவாய். ஆபத்து பிறருக்கு, பாதுகாப்பு உனக்கு என்கிற சுயநல உணர்ச்சியின் வெளிப்பாடு. ஆனால் இப்போது ஆபத்தான கூர்மைப் பகுதியைப் பிடித்துக் கொண்டு, பாதுகாப்பான கைப்பிடியை என்பக்கம் நீட்டினாய். அதாவது, பிறரைப் பாதுகாக்க வேண்டும் என்ற ரீதியாக உணர்வு உன்னிடம் ஏற்பட்டுவிட்டது. அதனால் தான் துறவறம் மேற்கொள்ள சம்மதித்தேன் என்று கூறினார்.

இதிலிருந்து நீங்கள் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், தியாக மனப்பான்மையே துறவின் அடிப்படை என்பதாகும். தியாக மனப் பான்மை இருந்தால்தான் பிறருக்குத் தொண்டாற்ற முடியும். மக்களுக்குச் சேவை செய்ய முடியும் என்ற தியாக உள்ளத்தைக் காட்டுகிறது.

வெளிநாட்டில் அவருக்குக் கிடைத்த சீடர்களில் மார்க்கரெட் எலிசபெத் மிகவும் முக்கியமானவர். அவர் இலண்டனில் ஒரு பள்ளிக் கூடத்தை நடத்திக் கொண்டிருந்தார். விவேகானந்தரின் கருத்துக்களால் கவரப்பட்ட அவரை இந்தியப் பெண்களுக்குக் கல்வி புகட்டுவதற்காக விவேகானந்தர் தயார் செய்தார். அதற்காகவே 1898-இல் கல்கத்தா வந்து சேர்ந்தார் அவர். பெண் குழந்தைகளைப் படிக்க வைப்பதைப் பற்றி நினைத்துப் பார்க்கக்கூட முடியாத அளவுக்குப் பெண் அடிமைக் கருத்துக் கள் தலைவிரித்து ஆடிய காலம் அது.

## பெண் துறவி நிவேதிதா

மார்க்கரெட் எலிசபெத்துக்குச் சகோதரி நிவேதிதா என்று விவேகானந்தர் பெயர் வைத்தார் . இந்தியாவில் உள்ள துறவிகளின் நடை முறையில் முன் எப்போதும் இல்லாதபடி முதல்முறையாக அந்த வெளி நாட்டுப் பெண்ணைத் துறவியாக்கினார். அவருக்கு 'பரமாச்சார்யா' எனும் துறவுப் பட்டத்தையும் வழங்கினார். இந்தியாவின் துறவு வாழ்க்கையில் இத்தகைய நிலைக்கு உயர்ந்த முதல் வெளிநாட்டுப் பெண் இவரே.

1898 நவம்பர் 13-இல் காளி பூசை அன்று கல்கத்தாவில் பெண்களுக்கான பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. விவேகானந்தர்தான் கட்டாயப் படுத்திப் பெண் குழந்தைகளை வரவழைக்கச் செய்தார். கல்வி கற்பிக்கப்பட்டது. விவேகானந்தரால் அன்று தொடங்கப்பட்ட பள்ளி இன்றும் 1 முதல் 12 வரையான வகுப்புகளோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

சுவாமி விவேகானந்தர் பெண்களின் முன்னேற்றத்துக்காக, சிங்கம் போன்ற பெண் தேவை என்றார். அந்த பெண் உண்மை, அன்பு, தூய்மை, உறுதி, வீரம் உள்ளிட்ட நற்குணங்களைப் பெற்றிருக்க வேண்டும் என எண்ணினார். அவரது எண்ணத்துக்கேற்ப சகோதரி நிவேதிதை இருந்தார்.

தேசியம், பெண்களின் முன்னேற்றம், நாட்டின் பெருமை உள்ளிட்ட விதத்தில் இந்திய மக்கள் உணராமல் அறியாமையால், சாதி, மதம் உள்ளிட்ட பிரிவினையால் உள்ளனர். அவர்களின் ஆற்றலை, அவர்களே உணர்ந்து செயல்பட, நீங்கள் பணியாற்ற வேண்டும் என சுவாமிஜி பணித்தார். அதை நிவேதிதை மகிழ்வுடன் ஏற்றார்.

தேசத்தின் பெருமைகளை மக்களுக்கு ஆங்கில மொழியில் பேசுவார். அதில், பலரும் நீங்கள் பேசும் மொழி நடை அருமை என்பார்கள். அதற்கு நிவேதிதை, "அடிமை மொழிகளில் மயங்காதீர்" நான் பேசும் தேசியக் கருத்துக்களை எடுத்துக் கொள்ளுங்கள். அதுபோல், தாய்மொழியைப் பேசிப் பழகுங்கள். அதில் நாட்டின் வரலாற்றினை எழுத முயலுங்கள். கலாச்சாரம், விழுமியங்கள், பண்பாட்டை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லுங்கள்" என உரக்கக் கூறினார் அவ்வழியிலே பாரதியார், இரவீந்திரநாத் தாகூரையும் வலியுறுத்தினார்.

### பாரதியின் குரு

மகாகவி பாரதியார் இவரைத் தமது குருவாகக் குறிப்பிடுவார். ஒருமுறை பாரதியார் சகோதரி நிவேதிதாவைச் சந்தித்தபோது, அவரது மனைவியை அழைத்து வரவில்லையா? என பாரதியாரிடம் கேட்டுள்ளார். அதற்கு பாரதியார், சமுதாய வழக்கப்படி தான் அவரை வெளியில் எங்கும் அழைத்துச் செல்வதில்லை எனக் குறிப்பிட்டார். அரசியல் குறித்து எதுவும் தெரியாது என்றும் கூறினார். இதைக் கேட்ட சகோதரி நிவேதிதை வருத்தத்துடன், 'மனைவியை அடிமைக்கு அதிகமாக நினைக்கின்ற இன்னொரு இந்திய மனிதரைக் காண்கிறேன்' என்றார். மேலும், சகோதரி நிவேதிதா, பாரதியிடம், 'உங்கள் மனைவிக்கே நீங்கள் சமஉரிமையும், விடுதலையும் கொடுப்பதில்லை. இந்நிலையில், நீங்கள் நாட்டுக்கு எவ்வாறு விடுதலை பெற்றுத்தரப் போகிறீர்கள்' என்று கேட்டார். இந்த உரையாடல் தான் பாரதியாருக்குப் பெண்களைப் பற்றிய சிந்தனையை மாற்றி, பெண்ணுரிமைக்காகப் போராடத் தூண்டுகோலாக இருந்தது.

இக்காரணங்களால் பாரதி, 'ஸ்வதேச கீதங்கள்', என்ற நூலை நிவேதிதைக்குச் சமர்ப்பணம் செய்து எழுதியிருந்தார்.

## அமெரிக்காவில் விவேகானந்தர்

விவேகானந்தரின் பேச்சில் மயங்கிய மேற்கத்தியப் பெண்கள் இவரைப் பின் தொடர்ந்தார்கள். அவரைத் தனிமையில் சந்திக்க வேண்டும் என்று எவ்வளவோ முயன்றார்கள். இறுதியாக ஒரு வாய்ப்பு கிடைத்தது.

அமெரிக்க இளைஞர்கள் சிலர் அழகில் மயங்கி என்னைச் சுற்றுகிறார்கள். ஆனால் நான் உங்கள் அறிவில் மயங்கி உங்களைச் சுற்றி வருகிறேன். என்னுடைய அழகும் உங்களுடைய அறிவும் சேர்ந்தால் நன்றாக இருக்குமே. நாம் திருமணம் செய்து கொண்டால் என் அழகோடும் உங்கள் அறிவோடும் குழந்தை பிறக்கும் என்று கூறினார் அந்த 20 வயதுப் பெண். அப்போதுதான் 30 வயதைத் தொட்டிருந்த விவேகானந்தர், தாயே எனக்கு வயது 30. உங்களுக்கு 20 இருக்கும். நாம் திருமணம் செய்து நமக்குப் பிறக்கும் குழந்தை அறிவுமிக்கதாக இருக்குமென்பதற்கு உத்தர வாதம் இல்லை. அதற்குப் பதிலாக நீங்கள் என்னையே மகனாக ஏற்றுக் கொள்ளலாமே என்றார். அந்தப் பதிலைக் கேட்டு அந்தப் பெண் அதிசயித்தாள்.

காண்கின்ற பெண்களையெல்லாம் தாயாகக் கருதியவர்.

## பெண்மையின் மதிப்பு

மேன்மக்கள் அனைவருமே பெண்மையை மதிப்பவர்கள். பெண்மையை மதிப்பவர்கள் அனைவரும் மேன்மக்களே. இம் மேன்மக்கள் பெண்களுக்கு மரியாதை கொடுத்து அவர்கள் முன்னேறுவதையே விரும்புவார்கள். இந்த நிகழ்வு நமக்குத் தெளிவாக உணர்த்துகிறது. சுவாமிஜி அமெரிக்காவில் இந்துமதப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த காலகட்டம். எந்நேரமும் அவரைச் சுற்றி ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டிருந்த ஆண், பெண் இளைஞர் கூட்டம் கூடியிருக்கும். அவர்களுடைய ஆன்மீக ஆற்றலை உணர்த்தவே சமயத்தில் தாயின் அன்போடும் தந்தையின் கண்டிப்போடும், நண்பர்களின் நல்லோரும் சீடர்களுக்கு வேதாந்தத்தைப் போதித்தார்.

சுவாமிஜி சில நேரங்களில் தம் சீடர்களுடன் சேர்ந்து இயற்கை எழில் கொஞ்சும் இடங்களை நாடிச் செல்லத் தொடங்குவார்.

அன்றும் அதேபோல சுவாமிஜி தனது சிஷ்யைகளான சகோதரி கிறிஸ்டைன் மற்றும் வேறு சிலருடன் ஒரு மலை மீது ஏறிக் கொண்டிருந்தார்.

ஆனால் அவருடைய சிஷ்யைகளுக்கு மலையேறுவது கடினமாக இருந்தது. பாறைகள் வழுக்கள், செங்குத்தான பாறை, ஒருவித தைரியமில்லாமல், மிகவும் சிரமப்பட்டு ஏறினர். ஆனால், சுவாமிஜி மின்னல் வேகத்தில் ஏறிக்கொண்டிருந்தார். தன் பெண் சிஷ்யைகளுக்கு எந்தவித உதவியும் செய்ய முன் வரவில்லை. இச்செயல் பெண்களுக்கு மன வருத்தத்தைத் தந்தது. அதை குருவிடமே கேட்டுவிட்டனர்.

இதற்கு விவேகானந்தரின் பதில், "குழந்தைகளே நீங்கள் வயதானவர்களாகவோ, பலவீனர்களாகவோ, ஆதரவற்றவர்களாகவோ இருந்தால் நான் உங்களுக்கு நிச்சயம் உதவ வேண்டும். ஆனால், யாருடைய உதவியும் இல்லாமலேயே உங்களால் இந்தக் கடினமான பாதையில் தாண்டிக் குதித்து ஏற முடியும். அதற்கான வல்லமை உங்களிடம் உள்ளது.

ஆண்கள், பெண்களுக்கு உதவ முற்படுவதெல்லாம், ஆசைகளை உள்ளுக்குள் மறைத்துக் கொண்டு அவர்கள் பெண்களிடம் காட்டும் வெற்று வீரம் தான் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று கூறினார். சுவாமிஜியின் இந்த உபதேசத்தைக் கேட்ட அந்தப் பெண்களுக்குச் சில உண்மைகள் தெளிவாயின.

பொதுவாக, பெண்களுக்குப் பரிந்து பேசுபவர்கள், பெண்களைப் பலவீனர்கள் என்றே சாதிக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் பெண்களின் உடலையோ மனதையோ மட்டும் தான் காண்கிறார்கள்.

ஆனால் விவேகானந்தர் பெண்களிடம் மட்டுமல்ல, அனைத்து மக்களிடமும் உடல், உள்ளம் பலங்களோடு ஆன்ம பலத்தையும் கண்டவர்.

## கற்பு குறித்து சுவாமிஜி

நல்ல சூழ்நிலையில் பெண்களின் கற்பு மலர்போல் இருந்து நல்லவர்களின் மனங்களை மேம்படுத்துகிறது. அதே சமயத்தில் சூழ்நிலை பாதகமாகும் போது பெண்களின் கற்பு சுட்டெரிக்கும் நெருப்பாகித் தீயவர்களைச் சுட்டெரிக்கிறது.

அதி பராக்கிரமசாலியாக இருந்தும் இராவணன் சீதையை நெருங்க முடியாததற்கு சீதையின் கற்பு தான் காரணம்.

இராவணனிடமிருந்து தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளும் திறமை, தேவைப்பட்டால் இராவணனையே சபிக்கக்கூடிய சக்தி. இவை இரண்டும் சீதையிடம் இருந்தன. ஆனாலும் ஸ்ரீராமன் தான் தன்னை வந்து மீட்க வேண்டும். தன்னை மீட்ட பெருமை இராமருக்கே கிடைக்க வேண்டும் என்ற உறுதியில் சீதை இருந்தாள். தூய்மையில் செறிந்திருந்த சீதை, இராவணன் காட்டிய சிற்றியல்புகளையும் பெருந்தன்மையுடன் பொறுத்திருந்தாள்.

இது போன்ற கற்பெனும் சக்தியைப் பெண்களும் பெறவேண்டும் என்பதற்காக, இந்தியப் பெண்களின் இலட்சியம் சீதை என்றும் சுவாமி விவேகானந்தர் கூறினார்.

ஒவ்வொரு பெண்ணும் தன் உடல், உள்ளத்தின் பலவீனங்களுக்குத் தன்னைத் தானே அடிமையாக்கிக் கொள்கிறாள். இந்த ஆதிக்கத்தைத் தான் சுவாமி விவேகானந்தர் முதலில் சுட்டிக்காட்டுகிறார்.

இந்த ஆதிக்கங்களிலிருந்து பெண்கள் மட்டுமல்ல, அனைவரும் விடுபட்டு ஆன்ம சுதந்திரத்தில் திளைக்க வேண்டும் என்பதே, சுவாமி விவேகானந்தர் காட்டும் விடுதலை வாழ்க்கை ஆகும்.

ஒரே ஒரு பெண் பிரம்மஞானத்தை அடைந்தால் கூட, அவளிடம் தோன்றிப் பரவும் அந்த ஒளியால் ஆயிரக்கணக்கான பெண்கள் உற்சாகம் கொண்டு பிரம்ம ஞானத்தை அடைய முயல்வார்கள். அப்போது இந்த நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் மகத்தான நன்மை ஏற்படும் என்று கூறினார். இந்தியப் பெண்களை விழித்தெழ வைத்த சுவாமி விவேகானந்தரின் பார்வை ஆழமுடையது. விசாலமானது. பெண்கள் முன்னேற்றத்துக்குப் பாடுபட்ட சுவாமியின் பணி வணங்குவதற்குரியது என்பதை உணர்ந்து நாம் செயல்படுவோம்.

♣♣♣

# உறுதிமொழி

வீரத் துறவி, விவேகானந்தப் பேரொளியே! தங்களுக்கு நாங்கள் தரும் உறுதிமொழி.

அரிதான இந்த மானுடப் பிறப்பை அலட்சியம் செய்யாமல், பொறுப்போடு வாழ்ந்து, செயற்கரிய காரியங்களைச் செய்வோம்.

தாங்கள் காட்டிய ஞான மார்க்கத்தைப் பின்பற்றி எங்களுள் புதைந்து கிடக்கும் அளவற்ற அறிவையும், ஆற்றலையும் முழுமையாக வெளிப்படுத்தி, உன்னத இலட்சியத்திற்காக வாழ்க்கையை அர்ப்பணித்து, வித்தியாசமாகச் சிந்தித்து, துணிச்சலோடு செயல்பட்டு புதிய சரித்திரம் படைப்போம்.

சாதி, மத இன உணர்வுகளை எல்லாம் கடந்து நாம் அனைவரும் இந்தியர்கள் என்ற உணர்வோடு செயல்பட்டு, நாட்டின் ஜனநாயகத்தையும் ஒருமைப்பாட்டையும் போற்றிப் பாதுகாப்போம்.

பாரம்பரியச் சிறப்புமிக்க நம் கலாச்சாரத்தை எந்நாளும் கட்டிக் காப்போம்.

நவீன விஞ்ஞானத்தையும், தொழில்நுட்பத்தையும், பயன்படுத்தி தேசத்தின் சமூக, பொருளாதார அந்தஸ்த்தை உயர்த்தி, பாரதத்தை 21ஆம் நூற்றாண்டில் உலகை ஆளும் வல்லரசாக உருவாக்குவோம். எங்களுக்கு அமைந்த வாழ்வையும், வாய்ப்பையும் முறையோடு பயன்படுத்தி, நாங்களும் வாழ்க்கையில் உயர்ந்து, எங்களை உயர்த்திய சமுதாயத்தையும் உயர்த்துவோம்.

இந்தக் கனவை நனவாக்கும் வரை ஓயமாட்டோம்!

இது சத்தியம்! வந்தே மாதரம்!

- டாக்டர் **பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்**

தலைவர்,

என்.ஜி.எம். கல்லூரி,

பொள்ளாச்சி.

ISBN 978-81-2343-807-8

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,

அம்பத்தூர், சென்னை - 600 098.

☎ 044 - 26251968, 26258410, 48601884

www.ncbhpublisher.in | email: info@ncbh.in

9 788123 438078

Code No. A 4002 ₹ 70.00